# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,இருக்கண்குடி

**சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்**

-----

## பசலி 1432 பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலைப்புள்ளி திறப்பு அறிவிப்பு

## நாள் : 21.06.2022

இத்திருக்கோயிலில் பசலி 1432க்கு கீழ்க்கண்ட இனங்களுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலைப்புள்ளி திறப்பு விருதுநகர் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் முன்னிலையில் 21.06.2022 அன்று அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நேரத்தில் திருக்கோவில் மாவிளக்கு மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | உரிம இனம் 1432 பசலிக்கு மட்டும் | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை | சொத்துமதிப்பு சான்றிதழ் தொகை | சொத்துமதிப்பு சான்று இல்லாவிடில் பதில் செலுத்த வேண்டியத் தொகை | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலைப்புள்ளி திறப்பு நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆடு,கோழி,சேவல் சேகர உரிமம் | ரூ.1,00,000/- வரைவோலை மட்டும் | ரூ.1,00,000/- | ரூ.1,00,000/- வரைவோலை | 21.06.2022 காலை 11.00 மணி |
| 2 | சித்தி விநாயகர் சன்னதியில் விழும் விடலைத் தேங்காய் சேகர உரிமம் | ரூ.25,000/- வரைவோலை மட்டும் | ரூ.25,000/- | ரூ.25,000/- வரைவோலை | |
| 3 | கருப்பசாமி சன்னதியில் விழும் விடலைத் தேங்காய் சேகர உரிமம் | ரூ.25,000/- வரைவோலை மட்டும் | ரூ.25,000/- | ரூ.25,000/- வரைவோலை | |
| 4 | பிளேடுசப்ளை (சூப்பர் மேக்ஸ் முழு பிளேடு) (விலைப்புள்ளி) | | | | நண்பகல் 12.00 மணி |
| 5 | சந்தன வில்லை (2.00 கிராம் எடை) (விலைப்புள்ளி) | | | | |
| 6 | நித்திய பூஜை படித்தரம் [illegible], தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு மற்றும் அன்னதானத்திற்கு வாழை இலை சப்ளை (டெண்டர்) | | | டெண்டர் டெபாசிட் ரூ.500/- | பிற்பகல் 12.30 மணி |
| 7 | வெள்ளையடிப்பு மற்றும் பெயிண்டிங் வேலை (டெண்டர்) | ஆடி திருவிழா மட்டும் | | ரூ.500/- | பிற்பகல் 2.00 மணி |
| 8 | ஒலி ஒளி அமைப்பு வேலை (டெண்டர்) | ஆடி,தை மற்றும் பங்குனி | | ரூ.500/- | |
| 9 | தரையை சமப்படுத்தி பாதைகள் செப்பனிடுதல் (டெண்டர்) | ஆடி திருவிழா மற்றும் தேவைக்கேற்ப | | ரூ.500/- | |
| 10 | தேங்காய் சப்ளை (டெண்டர்) | ஆடி திருவிழா மட்டும் | | ரூ.500/- | |
| 11 | வாழை மரங்கள் சப்ளை(டெண்டர்) | ஆடி,தை மற்றும் பங்குனி | | ரூ.500/- | |
| 12 | வெற்றிலை, பாக்கு (கலி பாக்கு) சப்ளை (டெண்டர்) | ஆடித் திருவிழா மட்டும் | | ரூ.500/- | |

<u>பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி</u>

| | | |
|---|---|---|
| 1 | டெண்டர் படிவம் விலை (ஒவ்வொரு இனத்திற்கும்) | ரூ.200/- (திரும்பப் பெறத்தக்கதல்ல) |
| 2 | டெண்டர் படிவம் வழங்கப்படும் நாள் | 20.06.2022 மாலை 5.00 மணிவரை |
| 3 | டெண்டர் கொடுக்க கடைசி நாள் | 21.06.2022 முற்பகல் 10.30 மணிவரை |
| 4 | ஏலம் நடைபெறும் நாள் | 21.06.2022 முற்பகல் 11.00 மணி |
| 5 | டெண்டர் திறப்பு நடைபெறும் நாள் | பொதுஏலம் முடிவுற்ற பின் |
| 6 | ஏலம்/டெண்டர் திறப்பு நடைபெறும் இடம் | திருக்கோயில் மாவிளக்கு மண்டபம். |

<u>பொது நிபந்தனைகள்</u>

1. பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பு தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளின் படி நடத்தப்படும். பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் அறநிலையத்துறை ஆணையர் மறுப்பாணை அதிகாரத்திற்குட்பட்டது.

2. முதலில் பொதுஏலம் நடத்தப்படும் ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட பின்பு ஏலம் நிறுத்தி வைக்கப்பட்டு வரப்பெற்ற டெண்டர் திறக்கப்படும். மேற்படி ஏலம் மற்றும் டெண்டரில் இதில் உயர்வான தொகை எதுவோ அந்த ஏலதாரர்/டெண்டர்தாரருக்கு ஏலம்/டெண்டர் பதிவு செய்யப்பட்டு ஆணையர் அங்கீகாரத்திற்கு பரிந்துரை செய்யப்படும்.

3. பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள இந்து மதத்தை சார்ந்தவர்கள் மட்டும் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே உரிய வைப்புத் தொகைக்கு உதவி ஆணையர் / செயல் அலுவலர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், இருக்கண்குடி என்ற பெயரில் வரைவோலை செலுத்தி கலந்து கொள்ளவேண்டும். ஷை நடவடிக்கையின் போது சொத்து மதிப்பு சான்றிதழ் கொடுக்க இயலாமல் உள்ளவர்கள் அதற்குப் பதிலாக வைப்புத் தொகையுடன் அந்தந்த இனத்திற்கு எதிரே குறிப்பிட்டுள்ளபடி காப்புத் தொகையினை வரைவோலை மூலம் கூடுதலாக செலுத்த வேண்டும். வைப்புத்தொகை காசோலையாகவோ, ரொக்கமாகவோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. வைப்புத்தொகை மற்றும் காப்புத் தொகைக்கு பல இனங்களுக்கு சேர்த்து ஒரே பணவரைவோலையாக வழங்கப்படுவது கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5. வெற்றி பெற்ற ஏலதாரர் டெபாசிட் போக ஏலத்தொகை முழுவதையும் உடன் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். தவறினால் ஏற்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஏலதாரரே பொறுப்பாவார்.

6. ஒவ்வொரு இன ஏலத்தின் போதும் அந்தந்த இனத்திற்கு தனித்தனியே வைப்புத்தொகை கட்டியவர்கள் மட்டுமே ஏலம் நடக்கும் இடத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

7. ஏல கேள்விகள் ஒவ்வொரு இனத்திற்கும் ரூ.500/-க்கு குறையாமல் இருக்க வேண்டும்.

8. பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி உரிமம் ஜாரியாகாதவர்களுக்கு முன் வைப்புத் தொகை மற்றும் சால்வன்ஸி சான்றிதழ் அல்லது காப்புத்தொகை பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை முடிந்தவுடன் திரும்ப கொடுக்கப்படும்.

9. உரிம காலம் ஆரம்பிப்பதற்கு முன் காரணம் எதுவும் சொல்லாமல் நிபந்தனைகளைக் கூட்டவும் குறைக்கவும் அல்லது மாறுதல் செய்யவும் திருக்கோவில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

10. காரணம் கூறாமல் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையை நிறுத்தி வைக்கவோ அல்லது ஒத்தி வைக்கவோ நிர்வாகிகளுக்கு உரிமையுண்டு.

11. பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் நியாயமான தொகைக்கு கேட்கவில்லை என்றாலோ அல்லது கூட்டு சோ்ந்து கொண்டு கேட்பதாக திருக்கோயில் நிர்வாகம் கருதினாலோ பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

12. உரிமம் உறுதி பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அவ்வுரிமையை மாற்றம் (டிரான்ஸ்பர்) செய்யவோ அல்லது பினாமியாக நடத்தவோ உரிமை கிடையாது மேலும் தன் விருப்பப்படி உரிமத்திலிருந்து விடுபட்வும் உரிமையில்லை.

13. பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் முழு விபரங்களும் நிபந்தனைகளும் தெரிந்தே கலந்து கொண்டதாக கருதப்படுவார்கள். நடவடிக்கை முடிவு செய்த பின்பு கூறும் எவ்வித ஆலோசனைகளும்/ ஆட்சேபனைகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

14. உரிமம் இனங்களுக்கு விற்பனை வரி மற்றும் ஏதேனும் அரசு வரிகள் செலுத்த வேண்டி இருந்தால் உரிமைதாரர் அவரது சொந்தப் பொறுப்பில் மேற்படி வரிகளைச் செலுத்திக் கொள்ள வேண்டும். மேற்படி வரிகள் சம்பந்தமாக இத்திருக்கோவிலுக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாது.

15. உரிமம் பெற்ற குத்தகைதாரர் உரிமத்தொகையுடன் 2.3% வருமான வரியினையும் திருக்கோவிலுக்குச் செலுத்தவேண்டும்.

16. வருமானவரி பிரிவு 206Cல் வருமானவரி கட்டாயம் செலுத்தவேண்டிய இனங்களுக்கு ஏலதாரர் அதில் கூறியுள்ள நிபந்தனைகளின்படி வருமானவரி செலுத்தவேண்டும்.

இல்லையெனில் வருமானவரி செலுத்த மேற்படி பிரிவின் கீழ் ஏலதாரர் பொறுப்பு இல்லை என்பதற்கு வருமானத் துறையிலிருந்து வழங்கப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டும். இதில் ஏற்படும் தாவாக்கள் அனைத்திற்கும் ஏலதாரரே முழுப்பொறுப்பேற்க வேண்டும்.

17. குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே உரிமம் விடப்படுவதால் உரிமம் காலம் முடிந்தவுடன் உரிமம் சொத்து தாமாகவே திருக்கோவில் சுவாதீனத்திற்கு வந்து விடும். இது தொடர்பாக திருக்கோயிலிலிருந்து எத்தகைய அறிவிப்பும் செய்யப்பட மாட்டாது.

18. பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளியின் மூலம் உரிமை கோருபவர் தொற்று நோய் உள்ளவராக இருக்கக்கூடாது.

19. திருக்கோவில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்களும், செயல்படுவதாக கருதப்படுபவர்களும், முன் பாக்கி வைத்திருப்பவர்களும், திருக்கோயிலை எதிர்த்து வழக்காடியுள்ளவர்கள், வழக்காடுபவர்கள் முதலானோர் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

20. உரிமம் பெற்றவர்களுக்கு இராஜீயம் தெய்வீகம் ஆகியவற்றால் ஏற்படும் இழப்புகளுக்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்க இயலாது.

21. பினாமி பெயரால் உரிமம் கேட்பதாக தெரியவந்தாலோ, முன்பாக்கி உள்ளவர்கள் உறவினர் பெயரால் உரிமம் கேட்க முன் வந்தாலோ ஷை நபர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை முடிவு செய்த பின்பு முன் பாக்கியுள்ளவர்கள் கலந்து கொண்டதாக தெரியவந்தால் உரிமம் ரத்து செய்யப்படும். பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்களை எவ்வித காரணமும் கூறாமல் தடுத்து நிறுத்த நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு.

22. பொதுஏலம்/டெண்டர் திறப்பு மூலம் உரிமம் பெற்றவர்களும் ஒதுக்கீடு செய்யப்படும் கட்டிடம் முதலானவற்றிற்கு திருக்கோவிலிலிருந்து நிர்ணயம் செய்யப்படும் வாடகை தொகையையும் செலுத்த வேண்டும்.

23. நிர்வாகத்தினரின் எழுத்து மூலமான உத்தரவில்லாமல் உரிமையை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது வேறு நபருக்கு உள்குத்தகைக்கு விடவோ கூடாது.

24. திருக்கோவில் நலன் கருதி உரிமம் பெற்றவர்களுக்கு ஏலம் விட்ட இடத்திற்கு பதிலாக வேறு மாற்று இடம் கொடுக்க நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோ அல்லது வேறு யாருக்கும் உரிமை கிடையாது.

25. உரிமதாரார் உரிம காலத்தில் இறந்து போனால் வாரிசுகளோ அல்லது அட்மினிஸ்ரேட்டர்களோ நிபந்தனைகளை நிறைவேற்ற கடமைப்பட்டவராவர். ஆனால் உரிமத்தினை நிர்வாகத்தினர் முடிவு செய்ய நினைத்தால் வாரிசுதாரருக்கு உரிமம்

பாத்தியதை இல்லை. புதிய நடவடிக்கை மேற்கொண்டு வேறு நபருக்கு உறுதி செய்ய நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு.

26. திருக்கோவில் அபிவிருத்தியை கருதி கட்டிடங்கள் மாறுதல், அபிவிருத்தி பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் உரிமம் காலத்தை ரத்து செய்து கட்டிடத்தை திரும்ப எடுத்துக் கொள்ள திருக்கோவிலுக்கு அதிகாரம் உண்டு. இதில் உரிமதாரர் ஏதும் நஷ்ட ஈடு கோர உரிமை இல்லை.

27. உரிமதாரர் அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திருக்கோவில் கட்டிடங்களில் திருக்கோயில் அனுமதியின்றி எவ்வித மாற்றங்களும் அல்லது மராமத்து வேலைகளும் செய்யக் கூடாது.

28. உரிமதாரர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள பொருட்களுக்கு தீ விபத்து மற்றும் இதர இயற்கை பாதிப்பிலிருந்து விடுபட தமது சொந்த பொறுப்பிலேயே இன்சூரன்ஸ் செய்திருக்க வேண்டும். அப்படி இன்சூரன்ஸ் செய்யாத பட்சத்தில் திருக்கோவிலிருந்து நஷ்ட ஈடும் கோரவும் கூடாது, அது வழங்கடப்படவும் மாட்டாது. கடைகள் மற்றும் இதர கட்டிடங்கள் தீ மற்றும் இயற்கை பாதிப்புகளுக்கு உள்ளானால் திருக்கோவில் நிர்வாகம் பொறுப்பு ஏற்க மாட்டாது. மேலும் தேவையான 'தீ' தடுப்பு சாதனங்களை தமது சொந்த பொறுப்பில் வாங்கி வைக்க வேண்டும்.

## ஆடு, சேவல், கோழிகள் சேகர உரிம கூடுதல் நிபந்தனைகள்

29. உபயமாக வரப்பெறும் ஆடு, சேவல், கோழிகளை மட்டும் தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

30. உபயமாக ஆடு, சேவல், கோழிகளை விடுபவர்களிடம் உரிமைதாரர் எவ்வித கட்டணமும் வசூலிக்ககூடாது. திருக்கோவிலில் உபயகாணிக்கை ரசீது போட்ட பின்பு தான் பொறுப்பில் எடுத்துக் கொள்ளவேண்டும். ஆடு, சேவல், கோழிகளுக்கு ரசீது போட்டபின் காணாமல் போனால் அதற்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

31. ஆடு, சேவல், கோழிகளை திருக்கோயிலிருந்து ஒதுக்கித் தரப்படும் இடத்தில் தான் சேகரம் செய்ய வேண்டும். சேகரிக்கும் சேவல், கோழிகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். நவதானிய தொட்டியில் சேகரிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

32. இதர நிபந்தனைகள் ஏதுமிருந்தால் அதை ஏலத்தின் போது அறிவிக்கப்படும்.

## விடலை தேங்காய் சேகர உரிம கூடுதல் நிபந்தனைகள்

33. ஏலம் எடுத்தவர் சன்னதிக்கு முன்புறம் உள்ள தொட்டியில் போடும் சிதறு தேங்காய்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். சன்னதியில் உடைக்கும்

தேங்காய்களை எடுக்க கூடாது. சிதறு தேங்காய் போடுவதை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். யாரையும் சிதறு தேங்காய் போடும்படி வற்புறுத்தக் கூடாது.

## விலைப்புள்ளி

இத்திருக்கோயிலில் பசலி 1432க்கு தேவையான சுமார் 2 லட்சம் முழு பிளேடு (சூப்பர் மேக்ஸ்) சப்ளை செய்ய கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு விலைப்புள்ளிகள் கோரப்படுகிறது.

### நிபந்தனைகள்

1. விலைப்புள்ளி கொடுப்பவர்கள் பசலி 1432க்கு பிளேடு சப்ளை செய்வதற்கு சம்மதம் தெரிவித்தே விலைப்புள்ளி கொடுப்பதாக கருதப்படும்.

2. விலைப்புள்ளி மூடிய கவரில் 21.06.2022 அன்று முற்பகல் 11.30 மணிக்குள் கொடுக்க வேண்டும். மேற்படி காலத்திற்கு பின்வரும் விலைப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விருதுநகர் உதவி ஆணையர் முன்னிலையில் நண்பகல் 12.00 மணியளவில் திறக்கப்படும்.

3. விலைப்புள்ளி கொடுப்பவர்கள் கவரில் பிளேடு சப்ளை செய்வதற்கான விலைப்புள்ளி என தெரிவிக்க வேண்டும்.

4. விலைப்புள்ளி இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் ரத்து மற்றும் அங்கீகாரத்திற்குட்பட்டது.

5. விலைப்புள்ளிகள் அங்கீகாரம் பெற்றவருக்கு திருக்கோயிலுக்குத் தேவைப்படும் அளவு ஆர்டர் வழங்கப்படும். மேற்படி பிளேடினை திருக்கோயில் வரை கொண்டு சேர்ப்பது விலைப்புள்ளிதாரரை சார்ந்ததாகும்.

6. ஆணையர் அங்கீகாரம் வரப்பெற்ற பின்னரே தொகை பட்டுவாடா செய்யப்படும்.

## விலைப்புள்ளி திறப்பு

இருக்கண்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் பசலி 1432க்கு தேவையான 2 கிராம் எடையுள்ள சந்தன வில்லைகள் சப்ளை செய்ய கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு விலைப்புள்ளிகள் கோரப்படுகிறது.

### நிபந்தனைகள்

1. சந்தன வில்லை ஒன்றின் எடை 2 கிராமுக்கு குறையாமல் இருக்க வேண்டும். சப்ளை செய்யும் மாதிரி வில்லைகள் இணைக்கப்பட வேண்டும். சப்ளை செய்யப்படும் மேற்படி சந்தனவில்லை 2 கிராம் எடைக்கு குறைவாக இருந்தால் உரிமம் ரத்து செய்யப்படும்.

2. விலைப்புள்ளி கொடுப்பவர்கள் சீலிட்ட கவரினை 21.06.2022 முற்பகல் 11.30 மணிக்குள் கொடுக்க வேண்டும். மேற்படி நேரத்திற்கு பின்பு வரப்பெறும் விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. நண்பகல் 12.00 மணியளவில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள்

விருதுநகர் உதவி ஆணையர் முன்னிலையில் திறக்கப்படும். கவரில் சந்தனவில்லைகள் விலைப்புள்ளி என குறிப்பிட வேண்டும்.

3. விலைப்புள்ளி இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் ரத்து மற்றும் அங்கீகாரத்திற்குட்பட்டது.

4. எவ்வித முன்பணமும் வழங்கப்பட மாட்டாது.

5. சந்தன வில்லைகளை திருக்கோயில் அலுவலகத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தல், வேன் வாடகை ஏற்றுக்கூலி மற்றும் இறக்கு கூலி முதலியவை விலைப்புள்ளிதாரரை சார்ந்தது.

6. ஆணையர் அங்கீகாரம் வரப்பெற்ற பின்னரே தொகை பட்டுவாடா செய்யப்படும்.

7. இதர நிபந்தனைகள் ஏதும் இருந்தால் விலைப்புள்ளி திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

## நித்யபூஜைப்படித்தரம் ஒப்பந்தப்புள்ளி திறப்பு

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி 21.06.2022 நண்பகல் 12.00 மணிவரை வரவேற்கப்படுகிறது. மேற்படி டெண்டர் 12.30.மணியளவில் விருதுநகர், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் முன்னிலையில் திறக்கப்படும்.

2. பால், தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, வாழை இலை ஆகிய இனங்களுக்கு இத்துறை ஆணையரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் வரப்பெற்ற பிறகு தான் சப்ளை செய்த பொருட்களுக்கான பணம் பட்டுவாடா செய்யப்படும்.

3. ஒப்பந்தப்புள்ளிதாரர் இந்து சமயத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கவரில் நித்திய பூஜைப்படித்தர சாமான்களை சப்ளை செய்தல் எனக் குறிப்பிடவேண்டும்.

4. திருக்கோயிலுக்கு முன் பாக்கியுள்ளவர் திருக்கோயிலை எதிர்த்து வழக்காடியவர்கள், வழக்காடுபவர்கள் முதலானோர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அருகதையற்றவர்கள்.

5. எக்காரணம் கொண்டும் விலைவாசி உயர்வு காரணமாக கொள்முதல் செய்யப்படும் (பால், தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, வாழை இலை) பொருட்களுக்கு கூடுதல் தொகை வழங்கப்பட மாட்டாது.

6. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் முன்வைப்புத் தொகையாக ரூ.500/– ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்துக் கொடுக்க வேண்டும்.

7. திருக்கோயிலில் நடைபெறும் மாதாந்திர திருவிழாக்கள் மற்றும் இதர வைபங்களுக்கு டெண்டர் ரேட்டிலேயே சப்ளை செய்ய வேண்டும்.

8. ஊர்ஜிதமான ஒப்பந்தப்புள்ளிதாரர் கட்டியுள்ள முன்வைப்புத் தொகை போக மற்ற ஒப்பந்ததாரர்கள் கட்டியுள்ள முன்வைப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளி திறப்பு முடிந்தவுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

9. ஒப்பந்தப்புள்ளிதாரர் கட்டியிருக்கும் டெபாசிட் தொகைக்கு எந்தவிதமான வட்டியும் கிடையாது.

10. ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ரத்து மற்றும் அங்கீகாரத்திற்குட்பட்டது.

11. மேற்படி நிபந்தனைகளில் எதில் தவறினாலும், எதில் தவறியதாக தெரிய வந்தாலும் ஒப்பந்தப்புள்ளிதாரருடைய உரிமம் ரத்து செய்யப்பட்டு மேற்படியார் கட்டியிருக்கும் முன்வைப்புத் தொகை ஆலயத்திற்கு ஆதாய வரவாக கருதப்படும். மேலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதில் லாபம் ஏற்பட்டால் மேற்படியாருக்கு எவ்வித பங்கும் கிடையாது. நஷ்டம் ஏற்பட்டால் ஏற்படும் இழப்புத்தொகை மேற்படியாரிடமிருந்து வசூலிக்கப்படும்.

12. எக்காரணத்தைக் கொண்டும் எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளி உரிமத்தை ரத்து செய்யவோ நிராகரிக்கவோ திருக்கோயில் நிர்வாகிக்கு பூரண அதிகாரமுண்டு.

## <u>சிறப்பு நிபந்தனைகள்</u>:

**<u>தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு சப்ளை</u>:**

ஒப்பந்தப்புள்ளிதாரர் தன் சொந்த செலவிலேயே மேற்படி பூஜைக்குரிய சாமான்களை தினசரி புதியதாக தரமானதாக கோவில் அலுவலகத்தில் கொண்டு வந்து வழங்க வேண்டும். அதற்குரிய பணம் கணக்கிடப்பட்டு பிரதிமாதம் கடைசி தேதியில் பட்டுவாடா செய்யப்படும். அதற்காக முன்பணம் வழங்கப்படமாட்டாது. தினசரி கொடுக்கப்படும் பூஜைப் பொருட்களில் அளவு வித்தியாசம் இல்லாமல் குறிப்பிட்டவாறு எண்ணிக்கை மற்றும் எடையில் வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் மேற்படியார் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படுவதுடன் கட்டியிருக்கும் முன் வைப்புத்தொகை ஆலயத்திற்கு இலாபகரமாக கருதப்படும். மேற்படியார் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**<u>வாழை இலை சப்ளை</u>:**

அன்னதான சாப்பாட்டிற்கு சப்ளை செய்யும் வாழை இலைகள் 60 செ.மீ. நீளமும், 40 செ.மீ.அகலமும் உடையதாக இருக்க வேண்டும். வாழை இலை வாடியதாக இருக்கக் கூடாது. சப்ளை செய்யும் வாழை இலைகளில் ஏதேனும் கிழிசல் ஏற்பட்டால் டெண்டர்தாரரே மறு இலை வழங்க தயார் நிலையில் இருத்தல் வேண்டும். கிழிசல் ஏற்படும் இலைக்கு எவ்விதத் தொகையும் வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு நாளுக்கும் தேவைப்படும் 250 அல்லது 350 வாழை இலைகளை காலை 10.00 மணிக்குள் அன்னதான மண்டபத்தில் பொறுப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

# திருவிழா ஒப்பந்தப்புள்ளி திறப்பு

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி 21.06.2022 பிற்பகல் 1.00 மணிவரை வரவேற்கப்படுகிறது. மேற்படி டெண்டர் 2.00.மணியளவில் விருதுநகர், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் முன்னிலையில் திறக்கப்படும்.

2. டெண்டர் டெபாசிட் தொகையை அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்று டெண்டர் ஷெடியூல் படிவம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே டெண்டர் படிவத்தில் உள்ளபடி டெபாசிட் தொகை செலுத்தப்பட வேண்டும்.

4. டெண்டர் ஷெடியூலில் உள்ளபடி சரியான காலத்திலும் எண்ணிக்கையிலும் வேலைகள் மேற்கொள்ளவும் பொருட்கள் சப்ளை செய்யவும் தயாராக இருக்க வேண்டும்.

5. வேலைகள் செய்து முடிந்த பின்னர் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு உரிய தொகை பட்டுவா செய்யப்படும்.

6. டெண்டர்கள் இந்து சமய அறநிலையத்துறை அங்கீகாரத்திற்குட்பட்டது.

7. திருக்கோயிலுக்கு எந்தவிதத்திலும் முன்பாக்கியுள்ளவர்கள், திருக்கோயிலை எதிர்த்து வழக்காடியவர்கள், வழக்காடுபவர்கள் ஆகியோர் டெண்டர் கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

8. திருக்கோயிலிலிருந்து பெற்ற டெண்டர் ஷெட்யூலில் தான் தொகையைக் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

9. இதர நிபந்தனைகளை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இருக்கண்குடி
03.06.2022.

உதவி ஆணையர்/
செயல் அலுவலர்.

தலைவர்
பரம்பரை அறங்காவலர் குழு.